www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது




பிரேமதாசா அரசாங்கம் அரசியல் தீர்வொன்றைக் காணுமானால் குறைந்தது இருபது வருடங்களுக்கு அதனை அசைக்க முடியாது.

சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றவராக பிரேமதாசா மாறிவிடுவார்.

ஜனாதிபதி தேர்தல்களிலும் வாக்குகள் குவியும். தொடர்ந்து ஜனாதிபதியாகவே இருப்பார்.

இவையெல்லாம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்து கண்ட முடிவுகள்.

அந்த முடிவுகளின் பிரகாரம் பிரேமதாசா அராசாங்கத்திற்கு நெருக்கடியைக் கொடுக்கும் விதமான கோரிக்கைகளை எடுத்துவிட ஆரம்பித்தனர்.

தற்போது எப்படி ஐ.தே.கட்சியினர் பொதுஜன முன்னணியினரோடு அரசியல் தீர்வு விடயத்தில் கண்ணாமூச்சி விளையாட்டில் ஈடுபட்டுள்ளனரோ, அதே போன்றுதான் அன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஐ.தே.கட்சி அரசுடன் விளையாடினார்கள்.

அப்போது தமிழ்க்கட்சிகள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தன.

கூட்டணியின் செயலதிபர் அ.அமிர்தலிங்கம் கொல்லப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில், "சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் நல்ல சூழல் தோன்றுவதைக் குழப்பவேண்டாம். இலங்கை அரசும், புலிகளும் தற்போது பேச்சு நடத்த ஆரம்பித்துள்ளனர். இக் காலகட்டத்தில் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தாதீர்கள்" என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆனாலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசு, புலிகள் பேச்சுக்கள் தொடர்பான சந்தேகங்களை கிளப்பிவிட்டதுடன், வடக்கு-கிழக்கு பிரிப்பு என்பதையும் விரைவுபடுத்துமாறு தூண்டிக் கொண்டிருந்தனர்.

இதனை முறியடிக்க பிரேமதாசாவும் இராஜதந்திர வியூகங்களை வகுக்கத் தொடங்கினார்.

### சர்வகட்சி மாநாடு

"சகல கட்சிகளுடனும் பேசத் தயாராக இருக்கிறேன். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த பொதுக் கருத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த விரும்புகிறேன்" என்று அறிவித்தார்.

இன்று ஜனாதிபதி சந்திரிக்கா அரசியல் தீர்வுக்கு பொது இணக்கம் காணப்போவதாக கூறிக்கொண்டே காலத்தை இழுத்தடிக்கிறார் அல்லவா, இந்தத் தந்திரம் சாட்சாத் பிரேமதாசாவின் அடியொற்றிய தந்திரம்தான்.

சர்வகட்சி மாநாடு ஒன்றை கூட்டப் போவதாகவும் ஜனாதிபதி பிரேமதாசா கூறினார்.

'சர்வகட்சி மாநாடு' என்பது அருமையான இழுத்தடிப்பு இராஜதந்திரம். இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தனக்குள்ள கடப்பாட்டை ஏனைய கட்சிகள்மீது மெல்லச் சுமத்தி விடும் இராஜதந்திரம்.

பிரேமதாசாவின் அரசியல் சாணக்கியத்திற்கு பல உதாரணங்கள் கூறலாம். அதில் ஒன்றுதான் சர்வகட்சி மாநாடு.

பொதுஜன முன்னணி அரசாங்கம் தனது தீர்வுப் பொதிக்கு நாடெங்கும் இருந்து அபிப்பிராயம் கேட்டதல்லவா. இந்த இழுத்தடிப்பு நாடகம்கூட பிரேமதாசாவின் சர்வகட்சி மாநாட்டு தந்திரத்தை பின்பற்றி உருவாக்கப்பட்ட ஒன்றேயாகும்.

நாடு முழுவதும் உள்ள கட்சிகளது அபிப்பிராயம் கேட்பதற்காகவும், பொது இணக்கம் காண்பதற்காகவும் சர்வகட்சி மாநாடு என்பது பிரேமாவின் இழுத்தடிப்பு தந்திரம்.

நாட்டு மக்கள் அனைவரது அபிப்பிராயத்தையும் கேட்கப்போவதாக கூறியது ஜனாதிபதி சந்திரிக்காவின் இழுத்தடிப்பு தந்திரம்.

பிரேமதாசா பாய்ந்தது எட்டடி. சந்திரிக்கா அம்மையார் பாய்ந்தது பதினாறடி. ஆனாலும் வழிகாட்டி பிரேமதாசா தான் என்பதை மறப்பதற்கில்லை.

### புலிகள் சந்தேகம்

பிரேமதாசாவின் அறிவிப்புக்கள் புலிகளுக்கு சந்தேகத்தை உருவாக்கின. ஆனாலும் இந்தியப் படை முற்றாக வெளியேறும்வரை பிணக்கை உருவாக்கப் புலிகள் விரும்பவில்லை.

1989 டிசம்பர் மாதமளவில் யாழ் குடாநாட்டில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். உட்பட ஏனைய இயக்கங்கள் வாபஸ் பெறத் தொடங்கின.

வடக்கு-கிழக்கில் திருமலை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து இந்தியப் படை வாபஸ் பெறப்பட்டுக் கொண்டிருந்தது.

"இந்தியப் படை வெளியேறினால் நாம் ஆயுதம் ஏந்திப் போராடுவோம்" என்று இலங்கை அரசை எச்சரித்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் இந்தியப் படை வாபசாகத் தொடங்கியதும் மளமள வென்று மூட்டைகளைக் கட்டினர்.

இந்தியப்படை வாபசாகிச் செல்ல முன்னரே, ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் வாபசாகி திருமலைக்கு சென்று விட்டனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளில் வாபசாக முன்னர் ஆளாளுக்கு கொள்ளையடித்துக் கொண்டு சென்றனர்.

இது இயக்கத்தின் தலைமைக்கு தெரிந்தே நடந்த காரியமல்ல. ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பத்மநாபாவுக்கு தெரியாமல் ஆங்காங்கே பொறுப்பில் இருந்தவர்களும், கட்டுப்பாடற்ற உறுப்பினர்களும் நடத்திய கூத்து அது.

ஆனாலும் கட்டுப்பாடற்ற விதமாக இயக்கம் நடத்தி மக்கள் விரோத சக்திகளை வளர்த்துவிட்ட பொறுப்பில் இருந்து பத்மநாபா போன்றோர் தப்ப முடியாது.

தலைவர்களின் நடைமுறைகளும் உறுப்பினர்களைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கும்.

## பெண்வேட்டை நடத்திய பிரமுகர்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களில் ஒருவராக இருந்தவர் கிருபாகரன். இவருக்கு பிடித்த பொழுது போக்குகள், நிதி சுருட்டுவது, பெண்களை சேகரிப்பது.

தனது பெண் தொடர்புகளை இயக்க நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாக அவர் வைத்திருந்தால் அதனை தனிப்பட்ட விவகாரம் என்று விட்டுவிடலாம். அது பற்றி பேசுவதும் நாகரிகமல்ல.

ஆனால், தனது பலவீனங்களுக்கு இயக்க பொறுப்புக்களையும், இயக்கத்தின் வளங்களையும் பயன்படுத்தியதுடன், தனக்கு பிடித்தமான பெண்களின் எடுபிடிகளாக இயக்க உறுப்பினர்களை நடக்கவும் செய்தார் கிருபாகரன்.

இரவில் தினம் ஒரு வீட்டுக்கு விஜயம் செய்வார் கிருபாகரன். அவருடன் செல்லும் இயக்க உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் வெளியே காவலுக்கு இருப்பார்கள்.

மாகாண சபை வேலை வாய்ப்புக்கான பிரதியுபகாரமாகவும் தன் இச்சைகளுக்கு பெண்களை பணியவைத்தார் என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளன.

கிருபாகரன் போன்றோர் பெண்களுக்கு வழங்கிய முன்னுரிமை என்பது பெண் விடுதலை சார்ந்த ஒன்றல்ல. ஏனெனில் பெண் விடுதலையை கொச்சைப்படுத்தி கேலி செய்யும் குணம் கொண்டவர்களாகவே இவர்கள் இருந்தனர்.

எனவே, இவர்கள் வழங்கிய முன்னுரிமை என்பது தங்கள் பலவீனங்களை நிறைவு செய்த பெண்களுக்கு வழங்கப்பட்ட தட்டிக்கொடுப்பாகவே இருந்தது.

அதனால்தான், பெண் விடுதலை பற்றிய ஆக்கபூர்வமான சிந்தனைகளை முதன் முதலில் வெளியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால், இறுதிவரை பலமான பெண்கள் அமைப்பொன்றை கட்டியெழுப்ப முடியாமல் போனது.

### துக்க வரலாறு

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்கு ஒரு துக்ககரமான வரலாறு இருக்கிறது. சமூக விடுதலை, பெண் விடுதலை, பகுத்தறிவு போன்ற கொள்கைகளை அந்த இயக்கத்தில் முன்வைத்தவர்கள் இதயசுத்தியுடன்தான் முன்வைத்தனர். அதனால்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆரம்பகாலத்தில் உத்வேகமாக வளர்ந்தது.

ஆனால், இயக்கம் வளர்ந்த பின்னர் கொள்கைகள் பேசியவர்கள் ஓரம் கட்டப்பட்டனர். தவறான நபர்கள் தலைமையால் முன்னிறுத்தப்பட்டனர்.

இந்த தவறான சக்திகள், சரியான சக்திகள் முன்வைத்த கொள்கைகளை தங்களுடையதாக உரிமை கோரிக்கொண்டதுடன், தங்கள் பலவீனங்களையும், தவறுகளையும் மூடி மறைக்க பூசும் சாயங்களாகவும் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டன.

அவ்வாறான ஒரு நபர்தான் கிருபாகரன். இவர் போல் பலர் இருந்தனர். இருக்கின்றனர்.

### சுவீகரித்தனர்

இன்னொரு சுவாரசியமான விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழக அரசியலின் கேடு கெட்ட பல பழக்க வழக்கங்களை நம் இயக்கங்களின் தலைவர்கள் சுவீகரித்துக் கொண்டனர்.

தமிழக அரசியல் கட்சிகள் சிலவற்றில் உள்ள மகளிர் அமைப்புக்கள் பெண் விடுதலைக்காக உருவாக்கப்பட்டவையல்ல.


பிரேமதாசா

தேர்தல் பிரசாரத்தில் வாக்குத் திரட்டவும், ஏனைய காலங்களில் தலைவர்களுக்கு படுக்கையறை துணையாகவும் பரிமாறப் படத்தக்க அமைப்புக்களே அவை.

முக்கிய தலைவருக்கு பிடித்தமான பெண்கள்தான் மகளிர் அணித் தலைவியாகவோ, இலக்கிய அணித் தலைவியாகவோ பதவி வழங்கி கௌரவிக்கப்படுவர்.

அதனால் கட்சியின் பணத்திலேயே தனக்கு பிடித்தமான பெண்ணுக்கு சலுகைகள், வசதிகள் என்பவற்றை தலைவர்கள் செய்து கொடுப்பார்கள்.

இதே பாணியைத்தான் இங்கும் நடைமுறைப்படுத்த முற்பட்டனரே தவிர, பெண் விடுதலை அமைப்புக்களை கட்டியெழுப்ப முற்படவில்லை.

இன்று விடுதலைப் புலிகளால் பெண்கள் அமைப்பை கட்டியெழுப்ப மட்டுமல்ல, போராட்டத்தின் பிரதான சக்தியாகவே மாற்றவும் முடிந்திருக்கிறது. ஆனால், புலிகளுக்கு முன்னரே பெண் விடுதலை பேசிய இயக்கங்களால் எதனையும் உருப்படியாக சாதிக்க முடியவில்லை.

தமிழக அரசியலின் கேடு கெட்ட பழக்க வழக்கங்களுடன் கூடிய தலைமைகளால் போர்க்குணமிக்க உறுப்பினர்களை தக்கவைக்க முடியவில்லை.

'கிடைக்கிற, சந்தர்ப்பத்தை விடுவானேன் நாமும் அனுபவிப்போம்' என்ற மனநிலையை தமது உறுப்பினர்களிடம் ஏற்படுத்திவிட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்கள் வாபஸ் பெறும் போது, அவற்றின் உறுப்பினர்கள் மக்களுடன் நடந்து கொண்ட முறையும், அகப்பட்டதையெல்லாம் ஆளாளுக்கு சுருட்டிய வேகமும் அந்த மனநிலையை நன்கு வெளிப்படுத்தியது.

தம்மிடமுள்ள ஆயுதங்களை பத்திரமாக மறைத்துவைக்கக்கூட பலருக்கு அவகாசம் போதவில்லை.

இந்தியப் படையினர் தாம் வெளியேறும் போது பெட்டிபெட்டியாக ஆயுதங்களை வழங்கினார்கள்.

"அக் கட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். போன்ற இயக்கங்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் வடக்கு-கிழக்கை பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்து தனி ஈழ இராச்சியம் நடத்த போதுமானது" என்று இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் பின்னர் கூறியிருந்தார்.

பெட்டி, பெட்டியாக புத்தம்புது ஆயுதங்கள், கிடைத்தன. அதற்கேற்ப ஆட்கள் எண்ணிக்கையும் இந்தியப் படையுடன் நின்ற இயக்கங்களிடம் இருந்தன.

ஆயுதங்கள் இருந்தன. ஆட்கள் இருந்தன. போதிய நிதி கோடி கோடியாக இருந்தது. மாகாண சபை இருந்தது. ஆனால் பிரதானமான மூன்று மட்டும் இருக்கவில்லை.

1) உறுதியான தலைமை. 2) கட்டுப்பாடு. 3) போர்க்குணம்.

எனவே, 1989 டிசம்பரில் திருமலை நோக்கி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அணிகள் போய்ச் சேர்ந்தன.

குறிப்பிட்ட சில பொறுப்பாளர்கள் மட்டும் ஆயுதங்களை பத்திரமாக புதைத்து வைத்துவிட்டுப் போனார்கள்.

### தோல்வி கண்ட அணுகுமுறை

இயக்கத்திற்கு உறுப்பினர்களை சேர்க்க காட்டிய அக்கறையில் ஒரு வீதத்தைக்கூட அந்த உறுப்பினர்களை பாதுகாப்பதில் காட்டவில்லை என்பது மற்றொரு சோகம்.

சமூக விரோதிகளாக இருந்தால் என்ன, ஓடுகாலிகளாக இருந்தால் என்ன இயக்கத்தில் சேரவந்தால் உள்வாங்குவது பத்மநாபா பாணியாகும்.

எப்படியோ இயக்கத்தில் ஆள் இருந்தால் போதும். எப்படி இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பது பற்றி பின்னர் கவலைப்படுவதே கிடையாது.

இந்த அணுகுமுறைக்கு கிடைத்த மகத்தான மரண அடிதான் இந்தியப்படை காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு ஏற்பட்ட வீழ்ச்சியாகும்.

இந்தியப் படையினர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு கொடுத்த ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

பெருமளவான ஆயுதங்கள் அவ்வாறு புலிகளால் கைப்பற்றப்பட்டன.

பிரேமதாசா புலிகளுக்கு கொடுத்த ஆயுதத்தைவிட, பயிற்சி காலத்தில் இந்தியா புலிகளுக்கு நேரடியாக கொடுத்த ஆயுதங்களைவிட, ஈ.பி.ஆர்.எல்.எஃப். புலிகளிடம் பறிகொடுத்த ஆயுதங்கள் பல மடங்கு.

இதனை புலிகள் கேலியாக "இந்தியா ஈ.பி.ஆர். எல்.எஃப். ஊடாக எங்களுக்கு ஆயுதம் தந்திருக்கிறது!" என்று கூறிக் கொண்டனர்.

## வல்வெட்டித்துறையில் வெறியாட்டம்



சண்டே டைம்சில் வெளியான காட்டூண்

### மன்னிப்புச்சபை அறிக்கை

14.12.1989 அன்று சர்வதேச மன்னிப்புச் சபையின் இலண்டன் தலைமையகத்தால் அறிக்கை ஒன்று விடுக்கப் பட்டது.

இலங்கையில் வடக்கு-கிழக்கில் நீதி விசாரணையற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அந்த அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டிருந்தது.

1989ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வல்வெட்டித்துறையில் இந்தியப்படை நடத்திய மனித வேட்டை பற்றி அந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டிருந்தது. அதனை இங்கு தருகிறேன்.

"1989 அகஸ்ட் 2ம் திகதி காலையில், வல்வெட்டித்துறை சந்தைப் பகுதியில் இந்தியப் படையின் 17வது சீக்கிய ரெஜிமெண்ட் பிரிவு ரோந்து சென்றுகொண்டிருந்தது.

அவர்கள்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறு சிப்பாய்கள் பலியானதாகவும், பதினொருபேர் காயம் அடைந்தனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு பகுதியினரதும் மோதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. விடுதலைப் புலிகளது முக்கிய ஆதரவுக் கிராமம் என்று வர்ணிக்கப்படும் வல்வெட்டித் துறையில் உள்ள பல வீடுகளும் வர்த்தக நிலையங்களும் அரைமணி நேரத்தில் அங்கு திரண்டுவந்த இந்தியப்படையினரால் தீக்கிரையாக்கப்பட்டன.

உள்ளூர் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். அன்று பிற்பகல் இரண்டு மணிக்கும் மூன்று மணிக்கும் இடையே பலர் கொல்லப்பட்டனர்.

இந்தியப் படையினர் வல்வெட்டித் துறையைச் சுற்றிவளைத்து இரண்டரை நாட்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

இதனால் இங்கு காயமடைந்த மக்களுக்கு வைத்திய வசதி வழங்கவும் எவராலும் முடியாது போனது.

இந்தியப் படையினரின் தாக்குதலில் பொதுமக்களில் எழுபதுபேர் கொல்லப் பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர். இந்தியத் தரப்பினர் இதனை மறுத்தனர்.

முதலில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில் ஆறு சிப்பாய்களும், ஒரு அதிகாரியும் இந்தியப் படையில் இறந்ததாகவும், ஒன்பது சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும், புலிகளில் ஐந்து பேர் பலியானதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆகஸ்ட் மாதம் பதினொராம் திகதி தூதரகம் விடுத்த அறிக்கை, வல்வெட்டித் துறையில் இருபத்து நான்கு பொதுமக்கள் இறந்ததை ஒப்புக்கொண்டது. ஆயினும் இரு தரப்பு மோதலில் அகப்பட்டே அவர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்தது.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு அங்கு கொல்லப்பட்டவர்களில் 46 பேரின் பெயர் விபரங்களை வெளியிட்டுள்ளது.

இவர்களை இந்தியப் படையினர் திட்டமிட்டுக் கொலை செய்ததாகவும், மேலும் ஆறுபேரின் சடலங்களை இந்தியப் படையினர் எரித்துவிட்டதாகவும் பிரஜைகள் குழு குறிப்பிட்டிருந்தது.

இங்கு தப்பியவர்களின் தகவல்கள், நேரில் கண்டவர்களின் வாக்கு மூலங்கள், சுதந்திரமான பார்வையாளர்கள் சேகரித்த விபரங்கள் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு கிடைத்துள்ளது.

இத் தகவல்களின் பிரகாரம் இந்தியப் படையினர் தங்கள் சகாக்கள் கொல்லப் பட்டதற்கு, பழிவாங்கும் நடவடிக்கையாக, எதிர்க்கும் திராணியற்ற பொதுமக்களை வேண்டுமென்றே கொலை செய்தது தெரியவந்துள்ளது. என்று மன்னிப்புச் சபை குறிப்பிட்டிருந்தது.

மேலும் சில திடுக்கிடும் வாக்கு மூலங்களும் வெளியாகி இருந்தன.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்